செ.வெ.எண்-29 நாள்-17.08.2021

**அரியலூர் மாவட்டம்**
**உண்டு உறைவிட பள்ளி மற்றும் நியாயவிலைக்கடைகளின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.**

அரியலூர் மாவட்டம், கருப்பூர் சேனாதிபதி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின்கீழ் செயல்பட்டு வரும் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிட பள்ளியின் செயல்பாடுகள் குறித்தும், கீழப்பழூர் நியாயவிலைக்கடையின் உணவு பொருட்கள் இருப்பு நிலவரம் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (17.08.2021) ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, உண்டு உறைவிட பள்ளியின் செயல்பாடுகள், மாணவிகள் சேர்க்கை சார்ந்து மேற்கொள்ளப்படும் நடைமுறைகள், மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவு பட்டியல், சமையலறை, மாணவிகளுக்கான கழிவறை, பள்ளியில் உள்ள நூலகம் செயல்படும் விதம் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், மேலும் பள்ளியில் உள்ள ஆசிரியைகள் மற்றும் இதர பணியாளர்களின் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்கள். மேலும், கொரானா பெருந்தொற்று காரணமாக மாணவிகள் வீட்டிலேயே இருப்பதால் அவர்களுக்கு எந்தவிதமான கல்வியினை கற்பிக்கப்படுகிறது எனவும் மாணவிகளின் வீட்டிற்கே சென்று கல்வி கற்றுக் கொடுப்பதன் அவசியத்தையும், பள்ளியினை ஏற்று நடத்தி வரும் குடந்தை சேவா சங்கம், அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், கீழப்பழூர் நியாயவிலைக்கடையினை ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், பொதுமக்களுக்கு உரிய அளவில் உணவு பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்தும், இருப்பு பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட உணவுப்பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளா என்பது குறித்தும், சரியான எடை மற்றும் தரத்தில் உணவுப்பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, கோட்டாட்சியர் திரு.ஏழுமலை, வட்டாட்சியர் திரு.ராஜமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.அகிலா, மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் உதவி திட்ட அலுவலர் திரு.பி.இராஜா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.அ.ஆனந்த், அரியலூர் வட்டார வளமைய மேற்பார்வையாளர் திரு.ப.சிவசங்கரன், மற்றும் குடந்தை சேவா சங்க நிர்வாகி, அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**